[1993 மார்ச் 30

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரத்தூர் பகுதியில் மூன்றாயிரம் கால் நடைகள் இருப்பதாக கணக்கெடுத்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியிலே வாழ்கின்ற கால் நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். தமிழகத்திலேயுள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் உரிய நேரத்தில் தகுந்த சிகிச்சை அளிக்கக் கூடிய தன்மையில் அரசு திட்டம் தீட்டி வருகிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவமனை அமைக்காவிட்டால் ஒரு மருந்தகமாவது அதாவது சப்-சென்ட்டராவது அமைப்பதற்கு அரசு முன் வருமா என கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்விக்கு வேண்டிய பதில் வருகின்ற மானியக் கோரிக்கையின் போது அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 176, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

176—

பூம்புகார் தொகுதியில் கால்நடைப் பண்ணை அமைத்தல்.

*16868—திரு. எம். பூராசாமி : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கால்நடைப் பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூம்புகார் தொகுதியில் ஒரு கால் நடைப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் இல்லை.

(ஆ) என்வே இவ்வினாவிற்கு விடையில்லை.

1993 மார்ச் 30]

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதுமில்லை என்று சொல்லாத இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு, பூம்புகார் தொகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் நிறைந்த தொகுதி என்பதை அறியும். ஆகவே, தயவு கூர்ந்து அங்கே கால்நடைப் பண்ணை அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 10 இடங்களில் கால்நடைப் பண்ணைகள் இருக்கின்றன. அதிலே 3 தஞ்சை மாவட்டத்திலே ஈச்சங்கோட்டை மற்றும் ஒரத்தநாடு பகுதியிலேயும் நாகை - காயிதே மில்லத் மாவட்டத்தில் கொறுக்கையிலும் பண்ணைகள் இருக்கின்றன. எனவே புதிதாகப் பண்ணை வைக்க வேண்டிய அவசியம் இல்லையென இத்துறை கருதுகிறது.

திரு. எம். பூராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால் நடைகள் மிகவும் நிறைந்த இடம் பூம்புகார், ஆகவே, தயவு செய்து வருகின்ற ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக கால் நடைப் பண்ணைகள் அமைக்க வேண்டிய சூழ்நிலை வருகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 177, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

177—

பரமக்குடியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்ட நிலம் கையகப்படுத்தல்.

*10848—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்ட நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த ஆண்டு கட்டப்படும் ?

SATYAMEVA JAYATE வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS